Registered as a Newspaper in Ceylon

விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி வைகாசி 29 ஆம் நாள் முஹர்ரம் 29 (11-6-64) வியாழக்கிழமை இதழ் 123

அங்கீகாரப்படி
தேசிய லொத்தர் (சுவீப்)
ஏக விநியோகஸ்தர்
கொழும்பு பிளான் ஜுவலறி கவுஸ்
நல்லூர், யாழ்ப்பாணம்.
தந்தி: சீதேவி. தொலைபேசி: 461.
கிளை விஜி கூல் பார்
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(ராணி தியேட்டருக்கு எதிரில்)
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
சில்லறை வியாபாரத்திற்கு ஆள் தேவை
ரு. 100/- கட்டுப்பணத்துடன் நேரில் சமுகமளிக்கவும்

# புதிய மந்திரிசபை இன்று பதவியேற்கும்

## என். எம். நிதிமந்திரி; மகாநாம பதவி துறப்பார்?

(மிகப் பிந்திய செய்தி)

கொழும்பு, வியாழன்

**சுதந்திரக்கட்சி-சமசமாஜக்கட்சி ஆகியவற்றைக் கொண்ட புதிய மந்திரிசபை இன்று பி. ப. 1-28 மணிக்கு பதவியேற்கவிருப்பதாக நம்பகமாக தெரிகிறது. டாக்டர் என். எம். பெரேரா நிதிமந்திரியாகவும், களுத்துறை எம். பி. திரு. சம்வி குணவர்த்தன தேசிய மய அல்லது தொழில் மந்திரியாகவும் இன்று சத்தியப் பிரமாணம் செய்வார்கள் என மிகவும் இறுதியாகக் கிடைத்த செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.**

புதிய மந்திரிசபை அமைப்பதில் பிரதமருக்கும் என். எம். கோஷ்டிக்குமிடையில் உடன்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. என். எம். மின் 10 அம்சத் திட்டத்தில் மொழிப் பிரச்சினை, சமயம், இந்தியர் பிரச்சினை, கலாச்சாரம் ஆகியவை சம்பந்தமாக பிரதமர் சில திருத்தங்கள் கொண்டு வந்தார். புதிய மந்திரி சபை 14 அல்லது 15 ஆக அதிகரிக்கப் படும் எனவும் கூறப்படுகிறது.

ஒத்திவைக்கப்பட்ட பார்லிமெண்ட் கூட்டத்தொடர் இம் மாதம் 30-ம் திகதியோ, அல்லது ஜூலை முதலாம் திகதியோ ஆரம்பமாகலாம்.

புதிய மந்திரிசபையில் திரு. மகநாம சமரவீராவுக்கு பதவி கொடுக்கப்படமாட்டாதெனவும், தற்போதைய நிதிமந்திரி திரு. இலங்கரத்ன வர்த்தக மந்திரியாகவும் பதவியேற்பார் எனவும் ஆகக்கடைசிச் செய்தி தெரிவிக்கின்றது. இன்று பத்திரிகை அச்சுக்குப் போகும்வரை (அதிகாலை 2-30 மணி) மந்திரிசபைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

(முன்னர் வந்த செய்தி)

### மந்திரிசபைக் கூட்டங்களும் பேச்சுவார்த்தைகளும்

கொழும்பு, வியாழன்

சென்ற மூன்று மாதங்களாக நடைபெற்றுவந்த கூட்டரசாங்கம் பற்றிய பேச்சுவார்த்தைகள் நேற்று என்றுமில்லாத வகையில் உச்சக் கட்டத்தை அடைந்தது. நேற்று நள்ளிரவுவரை மந்திரி சபை மூன்று முறைகள் கூடியது. பிரதமருக்கும் என். எம். பெரேராவுக்கு மிடையில் இரு முறை பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

**1-வது மந்திரிசபைக் கூட்டம்**

நேற்று காலை முதலில் மந்திரிசபை செனட் கட்டடத்தில் கூடியபோது பிரதமர், சமசமாஜக்கட்சியின் சார்பில் டாக்டர் என். எம். பெரேரா தம்மிடம் சமர்ப்பித்த கடிதத்தை சபையில் வெளியிட்டு, சமசமாஜக் கட்சியுடன் கூட்டரசாங்கம் அமைக்க தாம் தீர்மானித்து விட்டதாகத் தெரிவித்தார். இக்கூட்டத்துக்கு எல்லா மந்திரிகளும் வந்திருந்தனர்.

இக் கூட்டத்தில் கூட்டரசாங்கம் அமைப்பதற்கு லங்கா சமசமாஜகட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்த பிரதமருக்கு அதிகாரமளிக்கும் தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியது. கூட்டரசாங்கம் ஏற்படுமாயின் தாம் பதவியை விட்டு விலகப் போவதாக போக்குவரத்து மந்திரி மகநாம சமரவீரா தெரிவித்தார். கூட்டரசாங்கம் அமைக்குமுன் தேர்தல் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட வேண்டும் என விவசாயமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தெரிவித்தார். மார்க்ஸீய வாதிகளுடன் சேர்ந்து ஆட்சி நடத்த முடியாதெனவும், அப்படியாயின் சுதந்திரக்கட்சியின் கொள்கைகள் தவிடுபொடியாகிவிடும் எனவும் திரு. சி. பி. டி'சில்வா தெரிவித்தார்.

**2-வது மந்திரிசபைக் கூட்டம்**

பிற்பகல் இரண்டு மணியளவில் மீண்டும் மந்திரிசபை கூடியது. பிரதமரின் வாசஸ்தலமாகிய அலரி மாளிகையில் நடைபெற்ற இக்கூட்டம் பி. ப. 4 மணியளவில் முடிவடைந்தது.

**என். எம். - பிரதமர் முதல் சந்திப்பு**

இரண்டாவது தடவை நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டம் முடிவடைந்த சிறிது நேரத்தில் மாலை 5-30 மணியளவில் டாக்

(6-ம் பக்கம் பார்க்க)

## சதிவழக்கில் ஒரு எதிரி விடுதலை

### ஜி. ஜி. சுகவீனமுற்றதால் விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, புதன்

புரட்சிச் சதி வழக்கில் ஒரு எதிரி இன்று விடுதலை செய்யப்பட்டார். அவர்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு முதல் தோற்றத்திலேயே ஆதாரமில்லையென்றகாரணத்தினால் சதிவழக்கு நீதிபதிகள் மூவரும் அவரை விடுதலை செய்வதென முடிவு செய்தனர்.

புரட்சி சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள 23 எதிரிகளில் 23ம் எதிரியான திரு. ஜாக்ஸன் என்பவரே விடுதலையானவராகும்.

சதி வழக்கு இன்று காலை கொழும்பு கோட்டை பிளாக்ஸ்டார்வ் வீதியிலுள்ள உயர் நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது 23வதுஎதிரி எஸ். ஜி. ஜாக்ஸனை விடுதலை செய்வதாக நீதியரசர் சன்ஸோனி அறிவித்தார்.

**ஜி. ஜி. சுகவீனம்**

பெரும்பாலான எதிரிகளின் சார்பில் ஆஜராகும் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் உடல் நலம் குன்றியிருப்பதால் விசாரணை திங்கட்கிழமைவரை ஒத்தி வைக்கப்பட்டது.

## யாழ் அரசாங்க அதிபரின் சாட்சியம் பதிவு

### உதவி பொலிஸ் சுப்ரின்டன் மீதான விசாரணையில்

கொழும்பு, புதன்

தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்ட உதவிப் பொலிஸ் சூப்ரின்டனின் விசாரணை சம்பந்தமாக யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீராவினதும் பொலிஸ் கையெழுத்து அடையாள நிபுணரினதும் சாட்சியங்கள் நேற்று உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. சிறிவர்த்தனவால் பதிவு செய்யப் பட்டன.

சங்கப்பகுதியினரால் வழங்கப் பட்ட சன்மானப் பணமான ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட தொகையை மோசடி செய்தது சம்பந்தமான குற்றச் சாட்டின் பேரிலேயே இவர் தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

சென்ற வாரம் யாழ்ப்பாணத்தில் திரு. சிறிவர்த்தன விசாரணை நடத்தி பலரது சாட்சியங்களைப் பதிவு செய்தார். யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தஸ்தாவேஜுகள் சிலவற்றையும் இவர் பார்வையிட்டுள்ளாரெனவும் அறியப் படுகிறது.

இந்த விசாரணை சம்பந்தமாக சாட்சியமளித்த ஒருவர் தாம் காரில் பலவந்தமாக மூவரால் கடத்திச் செல்லப் பட்டதாகவும் கடத்திச் சென்றவர்களில் ஒருவர் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள உதவிப் பொலிஸ் சூப்பிரெண்டனின் உறவினரென்றும் வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார். இவரது முறைப்பாட்டில் தாம் மேற்படி மூவரின் வேண்டுகோளின் பேரிலேயே காரில் ஏறிச் சென்றதாகவும் தமது விருப்பத்துக்கு மாறாக கார் தெகிவளையை நோக்கிச்செல்வதைக் கண்டதும் தாம் காரின் ஸ்டியரிங்கைப் பலவந்தமாகத் திருப்பியதாகவும் கார் ஒரு பஸ்ஸுடன் மோத நேர்ந்ததாகவும் காரில் இருந்த மூவர் படுகாயமடைந்ததாகவும் தாம் சிறுகாயத்துடன் தப்பி விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

## இந்திராவுக்கு பதில் சின்ஹா

புதுடில்லி, ஜூன், 10

ஸ்ரீமதி இந்திராகாந்தி பதவி ஏற்கும் வரை அவருக்குப் பதிலாக சிவில் விமான சேவை மந்திரி திரு. சத்தியநாராயண் சின்ஹா தகவல் ஒலிபரப்பு மந்திரியாகவும் கடமையாற்றி வருவார் என அறிவிக்கப்பட்டது.

## வானமங்கைக்கு பெண் குழந்தை

மாஸ்கோ, ஜூன் 10

உலகின் முதலாவது வான வெளிப் பெண் ஸ்ரீமதி வெலண்டினா டெரஸ்கோவாவுக்கு இன்று பெண் குழந்தை பிறந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. அவரது கணவர் நிக்கலோயாவும் ஒரு வானவெளி வீரராகும்.

## சாஸ்திரிக்கு சூ-என்-லாய் செய்தி

புதுடில்லி, ஜூன் 10

சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரிக்கு அனுப்பியுள்ள ஒரு செய்தியில் இந்திய-சீன உறவு சமாதானமாக உடனிருந்து வாழும் அடிப்படையில் அபிவிருத்தியடையும் என நம்புவதாய்க் கூறியிருக்கிறார்.

### மணி வாக்கு

நம்சிந்தனைகளைத் துருவிப் பார்க்க வேண்டும்; அவற்றால் தீய செயல்கள் விளைந்து விடாமல் கவனிக்க வேண்டும். ஏனெனில் நாம்விதைப்பதை நாமே அறுவடை செய்ய வேண்டியிருக்கும்.

—புத்தபிரான்


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு வைகாசி ீ 29 உ. (11-6-64)


## நன்றே செய்க! இன்றே செய்க!

'இலங்கை எங்கே செல்கிறது?' என்ற கேள்வியை இலங்கை மக்களே கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இக்கேள்விக்குப் பதில் கிடைப்பதும் சுலபமல்ல.

இலங்கையுடன் விடுதலையடைந்த நாடுகளும் இலங்கைக்குப் பின் பல வருடங்கள் கழித்து விடுதலையடைந்த நாடுகளும் முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருக்கின்றன. அந்த நாடுகளிலும் உள்நாட்டுப் பிரச்னைகள் இல்லாமல் இல்லை. ஆனாலும் திட்டமிட்ட அபிவிருத்தி மூலமும் இதர நாடுகளின் அனுபவ பூர்வமான கஷ்ட நஷ்டங்களை அறிந்தும் நாட்டின் முன்னேற்றத்துக்காக அந்த நாடுகளின் அரசாங்கங்கள் உழைக்கின்றன. விடுதலையடைந்த ஆசிய ஆபிரிக்க நாடுகள் பலவும் இலங்கையைப் போன்று வெளிநாட்டுக் கொள்கையில் கோஷ்டி சேரா நடுநிலைமைக் கொள்கையையே பின்பற்றுகின்றன. அந்த நாடுகளுக்கும் அந்நிய உதவிகள் கிடைக்கின்றன. சில நாடுகள் மேற்கத்திய சார்புடையனவாகவும் மற்றும் சில கிழக்கத்திய சார்பாகவும் இருக்கின்றனவென்பதும் உண்மையே. என்றாலும் எந்தச் சார்புடைய கொள்கையைக் கடைப்பிடித்தாலும் அவைகள் இலங்கையை விட முன்னேற்றமடைந்து வருகின்றன. இலங்கை சுதந்திரமடைந்த முதற் பத்தாண்டுகளில் ஆட்சி பீடத்திலமர்ந்திருந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் மேற்கத்திய சார்புக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்த போதும் சரி அதன் பின் ஆட்சி பீடமேறிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கங்கள் கோஷ்டி சேரா நடுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றிய போதிலும் சரி நாட்டின் முன்னேற்றத்திற்கான திட்டங்கள் எதையும் செயல் படுத்தியதாகக் கூறமுடியாது.

பதவிப் போட்டியும், கட்சிப் பூசலும், இனவேற்றுமையும் தான் இலங்கை கண்டபலன்.

மார்ச் மாதம் 12-ம் திகதி பார்லிமெண்ட் கூட்டத் தொடர் திடீரெனக் கலைக்கப்பட்ட போது காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. பின்னர், பார்லிமெண்ட் கூட்டம் நடைபெறும் பொழுது செய்யக் கூடிய வேலைகளை விட பார்லிமெண்ட் கூட்டம் ஒத்திவைக்கப் பட்டிருக்கும் சமயத்தில் உருப்படியான வேலைகளைச் செய்யலாம் என்றும் அதற்காகவே பார்லிமெண்ட் கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. ஆனால் மாதங்கள் மூன்றாகியும் இன்னும் உருப்படாத கூட்டு அரசாங்கப் பேச்சுவார்த்தைகள் தவிர உருப்படியான வேலைகள் எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. பார்லிமெண்டில் ஆளும் கட்சியின் பெரும்பான்மைப்பலம் குறைந்துவிட்டதால் தேசிய அரசாங்கம் அமைக்க முயற்சி செய்யப்பட்டு வருவதாக செய்திகள் வெளிவந்தன. இச்செய்திகளை வெளியிடக்கூடாதென அவசரகாலச்சட்டவிதிகளின்கீழ் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது. பின்னர் மேதினக் கூட்டத்தில் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்புத் தருமாறு இடதுசாரி 'முற்போக்குவாதி'களை பிரதமரே அழைத்தார்.

இதன் விளைவாக இன்னமும் கூட்டரசாங்க அமைப்பு பற்றிபேச்சுவார்த்தைகள்தான் நடைபெற்று வருகின்றன. இடதுசாரி முன்னணியில் பிளவு;லங்காசமசமாஜக்கட்சிக்குள் பிளவு; அரசாங்கக்கட்சியில் வேறுபாடு ஆகிய செய்திகளைத் தவிர முடிவு எதையும் காணோம். ஆனால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிறது. வாழ்க்கைச் செலவு என்றுமில்லாதவாறு உயர்ந்து மக்கள் என்ன செய்வதென்று அறியாது திண்டாடுகின்றனர். அரசாங்க இலாகாக்களில் வேலைகள் மந்தகதியில் நடைபெறுகின்றன. உத்தியோகமொழி அமுல் காரணமாக அரசாங்க ஊழியர்கள் மத்தியிலும் சிறுபான்மையோர் மத்தியிலும் அதிருப்தி.

கூட்டு அரசாங்கம் வந்துவிட்டால் எல்லாக் கஷ்டங்களும் தீர்ந்துவிடும் என்கின்றனர் சிலர். மற்றும் சிலரோ கூட்டு அரசாங்கம் மேலும் பிரச்னைகளைத் தோற்றுவிக்குமேயொழிய பிரச்னைகளைத் தீர்க்காதென்றும் பொதுத் தேர்தலே வழியென்றும் கூறுகின்றனர். இவற்றினால் மக்கள்தான் குழப்பத்துக்குள்ளாகிறார்கள்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைப்பற்றி கமிட்டிகளை நியமித்துவிட்டால் போதும் என்று அரசாங்கம் நினைத்துக் கொண்டு தனது ஆட்சிக் காலத்தை நீடிக்கும் வழிவகைகளை ஆராய்கிறது போலும். இனியும் மக்களின் பொறுமையைச் சோதிப்பது அரசாங்கத்துக்கோ நாட்டுக்கோ நிச்சயம் நல்லதல்ல. எதைச் செய்வதானாலும் அதைக் காலந்தாழ்த்தாது செய்ய வேண்டும். கட்சியையோ பதவியையோபற்றிக் கவலைப்படுவதற்கு இது நேரமல்ல. நாட்டையும் நாட்டு மக்களையும்பற்றி சிந்திக்க வேண்டும். "ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும் நன்றே செய்யவும் வேண்டும், ஒன்றும் இன்றே செய்யவும் வேண்டும், இன்றும் இன்னே செய்யவும் வேண்டும்..." என்ற கபிலர் பெருமானின் வாக்கை அரசாங்கத்துக்கு நினைவூட்டுகிறோம்.

# வெளிமாகாண ஆசிரியர் புறக்கணிக்கப் படுகிறார்கள்!

## அ. இ. த. ஆ. சங்கம் மீது புரட்சி ஆசிரியர் சங்கம் கண்டனம்

அநுராதபுரம், புதன்

"இடமாற்ற விஷயத்தில் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்துகொள்கிறது."

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் நிர்வாக சபை அங்கத்தவரும், வடமத்திய மாகாணத் தமிழாசிரியர் சங்கச் செயலாளருமான திரு. க. பசுபதிப்பிள்ளை இங்கு ஆரம்பமான 'வெளிமாகாண ஆசிரியர் புரட்சிச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் செயலைக் கண்டித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது:

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கமே இப்போது அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் என்ற பெயரில் இயங்குகிறது. அதன் முக்கிய நிர்வாகிகளில் ஒருவரைத் தவிர அத்தனைபேருமே வட இலங்கையிலேயே தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். சங்கத்தில் எங்கள் கோரிக்கைகளைத் தங்கள் பெரும்பான்மைப் பலத்தினால் உதாசீனஞ்செய்து ஒதுக்கினர்கள்.

இடமாற்ற விஷயத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்துகொள்ளுகிறார்கள்.வடக்கேயிருந்து எவரையும் வெளியே மாற்ற இடங்கொடுப்பதில்லை. இந்தநிலைமை நீங்கவேண்டுமானால் வெளிமாகாண ஆசிரியர் அனைவரும் ஒன்றுசேர்ந்து உரிமைக்குரல் எழுப்பவேண்டும்.

விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்குதிரு.வை.சிவகுகதாசன் தலைமைவகித்தார். தலைவர் தமது தலைமையுரையில் வெளி மாகாண ஆசிரியர்களின் வேதனை துடைக்க இனிமேல் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தை நம்பிப் பயனில்லையென்றும் தன் கையே தனக்குதவியெனவே நாம் நமது விஷயங்களைக் கவனிக்க ஒரு சங்கம் அமைப்பது இன்றியமையாதது என்றும் கூறினர்.

சங்கத்தின் இயக்குனரில் ஒருவரான திரு. யோ. சி. நல்லதம்பி சங்கத்தின் நோக்கங்களை விபரித்துக் கூறினர். இதன் பின்னர் வெளிமாகாண ஆசிரியர் புரட்சிச் சங்கம் என்ற பெயரில் ஓர் சங்கத்தை நிறுவுவதெனற தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இச்சங்கத்தின் தற்காலிக நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப் பட்டது.

தலைவர்: திரு. வை. சிவகுகதாசன், செயலாளர்: திரு. க. பசுபதிப்பிள்ளை, தனதிகாரி: திரு. யோ. சி. நல்லதம்பி, நிர்வாகக்குழு: திருவாளர்கள் ந. கந்தசாமி ஐயர், இ. நடராசா, திருமதி எம். சண்முகம், செல்வி அக்னஸ் இம்மானுவேல். நிர்வாகக்குழு வெளிமாகாண ஆசிரியர்களை விரைவில் அங்கத்தவர்களாகச் சேர்த்துக்கொண்டதும் பொதுச்சபையைக் கூட்டிச் சங்கத்தின் விதிமுறைகளை அங்கீகரிப்பதென்றும் தீர்மானித்தது.

## யாழ். ஸ்ரீ முருகன் கைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். ஸ்ரீ முருகன் கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் நல்லூர் தெற்கு கற்பகவிநாயகர் ஆலய வீதியில் திரு. டபிள்யு எம். டி. நிக்கலஸ் தலைமையின்கீழ் ஆரம்பமாகித் தொடர்ந்து ஒவ்வொரு வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் நடைபெற்று முதல் மூன்றிடங்களைப் பெறும் சாம்பியன் கோஷ்டிகளுக்குச் சிறந்த வெள்ளிக்கிண்ணங்கள் பரிசளிக்கப்படும். இதில் பதினெட்டுக் கோஷ்டிகள் பங்கு பற்றுகின்றன.

## பணம் சேர்த்த தலைமையாசிரியர்!

கொழும்பு, புதன்

பாடசாலை மாணவர்களிடமிருந்து பணம் சேகரித்த குற்றத்திற்காக குனுப்பிட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை தலைமை ஆசிரியர், மேலிடத்தினால் அபராதம் விதிக்கப்பட்டார்.

உதவி கல்வி வித்தியாபதியின் உத்தரவின் பேரில் நடைபெற்ற விசாரணையில், பிரவேச பணமாக 124 ரூபா 50 சதம் மாணவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டதாகவும், கணக்கு விபரம் பாடசாலை பரிசோதகரிடம் காண்பிக்கப்படவில்லையென்றும் தெரியவருகிறது.

—

கொழும்பு, புதன்

"லண்டன் பரீட்சைகளை ரத்துச்செய்துவிட கல்வி இலாகா செய்துள்ள முடிவால் 10,000 மாணவர்களுக்கு அநீதியிழைக்கப்பட்டுள்ளது" என லண்டன் பல்கலைக்கழக வெளி மாணவர்கள் சங்கத் தலைவர் பண்டித மிடிகம அபரதான தேரோ, சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

—

## சிறந்த வெசாக் பரிசு

மக்கோனு, புதன்

"வெசாக்தினப் பரிசாக 'பேருவலை எக்சத் சகாததருண சமித்தி' ஏழைகளுக்கு அவர்கள் வசிப்பதற்கு புதிய வீடுகள் கட்டிக்கொடுத்துள்ளன. வெசாக் தினத்தை முன்னிட்டு அளிக்கப்பட்ட பரிசுகளில் சிறந்த பரிசு இது எனக் கூறலாம். இலங்கையிலுள்ள இவ்வித தர்மஸ்தாபனங்களுக்கு இது ஒரு நல்ல எடுத்துக் காட்டு" என பேருவலை ரத்னே சரதேரோ, புதிதாகக் கட்டப்பட்ட வீடுகளை இப்பகுதியிலுள்ள ஏழைகளிடம் ஒப்படைக்கும் வைபவத்தில் கலந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

## களத்துமேடு

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருக்கோணமலை ஆகிய மாவட்டங்களில் மாசி முதல் ஆவணி மாதம்வரை கோடைகாலம். அதுவும் இந்த வைகாசி, ஆனி, ஆடி, மாதங்கள் அருங்கோடை. மாரி காலத்து மழையால் நிலத்தில் இருந்த ஈரத்தன்மை அறவரண்டு போய்விடும். புல் பூண்டுகள் வாடிக் கருகிப் போகும். மரந்தடிகளில் பச்சைக் குழை இருக்காது. எல்லாம் ஒரே அந்த கார வரட்சியாயிருக்கும். இந்த நாட்களில் ஆடு, மாடுகளுக்குத் தீனி போடுவது பெரும் பிரச்னை.

காய்ந்த நெல் வைக்கோல் தான் இரவு பகலாக மாடுகளுக்குத் தீவனம். ஆடுகளுக்கு அதுவுமில்லை. வைக்கோலை மட்டுமே தின்னும் மாடுகள் ஒட்டிச் கருங்கிப் போயிருப்பதக்கு ஒரு காரணம் உண்டு. அது பலருக்குத் தெரியாது. வைக்கோலில் ஏராளமான வெல்லகைகள் (Oxalates) இருப்பதனால்தான் மாடுகளுக்கு அதனால் அதிகம் பலனில்லை,

இந்த வெல்லகைகள் வைக்கோலுடன் மாட்டின் குடலுக்குள் புகுந்தவுடனே குடல் காரத்தன்மையை அதிகரித்து, ஜீரணத்துக்கு உதவியான அகட்டு நீர் (Gastric juice) ஊறுவதைத் தடைசெய்கின்றன. இதனால் வைக்கோலில் காணப்படும் அந்த சொற்பமான உணவுச்சத்தும் உடலோடு சேராமல் சாணத்தோடு வெளியாகின்றது.

வைக்கோலை அப்படியே போரிலிருந்து பிரித்து மாட்டுத்தொழுவத்தில் போடாமல் அதைத் துண்டுதுண்டாக நறுக்கி 24 மணித்தியாலம் தண்ணீரில் ஊறவைத்து, மீண்டும் புது நீரில் இரண்டு தடவை அலசிக் கழுவிக் காய வைத்துப் போட்டால், வைக்கோலிலுள்ள வெல்லகை முதலிய கெட்ட சத்துகள் அற்றுப்போய், எரிகை (phosphate) முதலிய நல்ல சத்துக்கள் அதிகரிக்கும் என்று விவசாயப்பகுதியினர் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பெருமளவில் மாட்டுப் பண்ணை வைத்திருப்பவர்கள் வெறும் தண்ணீரில் கழுவுவதிலும்பார்க்க உப்புச்சோடா கலந்த தண்ணீரில் வைக்கோலை கழுவுவது இன்னும் கூடிய பலனைக் கொடுக்கும்.

யாழ்ப்பாணப் பகுதிகளில் இக் கோடை நாட்களில் எப்பொழுதும் சுயமாகக் கிடைக்கக்கூடிய பச்சைத்தீனி பனையோலை. இதில் 12 சத வீதம் பசிதமும், 4 சதவீதம் கொழுப்பும், 33 சதவீதம் கரிநீரகையும் இருப்பதாகக் கூறப்படுகிறது. பனையோலையைத் தும்புதும்பாகக் கிழித்துப் போட்டால் அதைப் போல சிறந்த பச்சைத் தீவனம் வேறொன்றுமில்லையென்று கூறலாம்.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா முதலிய பெருமளவு விவசாயம் செய்யும் நாடுகளில் கால்நடைகளுக்கென்றே புறம்பாக பச்சைத் தீவனப் புல் வகைகளையும் செடிகளையும் வளர்ப்பதுண்டு. சில ஐரோப்பிய நாடுகளில் ஏக்கர் ஏக்கராக உருளைக்கிழங்கு உற்பத்தி செய்து அதை அப்படியே அறுத்துக் கொண்டு போய் பன்றிகளுக்குத் தீனியாக வைப்பார்கள். நம் ஊரிலோ கால்நடைகளுக்கெனத் தனியாக உணவுவகை செய்வதில்லை. ஆடுமாடுகள் உலாவித்திரிந்து மேயக்கூடிய புல்தரைகளும் குறைவு. இருக்கும் புல்தரைகளிலும் உழவாரத்தால் செதுக்கி எடுக்கக் கூடிய சிறிய புல்பூண்டுகளே வளருகிறது.

செய்கைப் புல்லினங்களை உண்டுபண்ணும் வழக்கத்தை நம்மவர்கள் இன்னும் பின்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

பற்றவில்லை.

1922-ம் ஆண்டு பிலிப்பைன் தீவுகளிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட யானைப்புல் அல்லது ரேப்பியர்புல் இலங்கையின் எல்லாப்பகுதிகளிலும் சீதோஷ்ண நிதிக்கு ஏற்றவாறு வளரக் கூடியது. கால்நடைகளுக்கு அது கரும்பு போன்றது. இப்புல்லை வளர்ப்பதால் ஆடு மாடுகளுக்கு எக்காலத்திலும் நல்ல பச்சைத் தீனி கிடைப்பதோடு மட்டுமல்லாமல் இது வளரும் மண்ணும் நல்ல சத்துடையதாகிறதாம்.

குதிரைப்புல் அல்லது கிளிப்புல்லும் எங்கும் வளரக் கூடியது. இன்னும் நீர்ப்புல், மேர்க்கல்புல், குவாடிமாலா புல் என்று பலவிதமான புல்லினங்கள் இருக்கின்றன. இவற்றை வீட்டுவேலியோரங்களிலும் தோட்ட வேலிக்கரைகளிலும் பயிரிட்டு வளர்த்து வந்தால் கோடைக்காலத்தில் பச்சைத்தீனிக்குத் திண்டாட வேண்டியதில்லை.

திருநெல்வேலி, கிளிநொச்சி, ஹிங்குராக்கொடை முதலிய இடங்களிலுள்ள அரசாங்க கமங்களில் இப்புல்லினங்கள் செழிப்பாய் வளர்வதைக்காணலாம். ஊக்கமுள்ளவர்கள் இக்கமங்களுக்குச் சென்று புல் விதைகளையும் அவற்றைவளர்க்கும் முறைகளையும் பெற்றுக் கொள்ளலாம். —கலப்பை

# "ஒற்றுமையுடனும் வீரத்துடனும் எமதுகஷ்டங்களை சமாளிப்போம்"

## இந்திய மக்களுக்கு புதிய பிரதமரின் வானொலி செய்தி

புதுடில்லி, ஜூன் 10

நாட்டை எதிர்நோக்கியுள்ள கஷ்டங்களை நாம் ஒற்றுமையுடன், குறிக்கோளுடன், வீரத்துடன் சமாளிக்க வேண்டுமென்று இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர்சாஸ்திரி மக்களைக் கேட்டுள்ளார்.

இந்தியாவின் புதிய பிரதமராக நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட திரு. லால்பகதூர்சாஸ்திரி நேற்று மாலை இந்திய வானொலிமூலம் நாட்டு மக்களுக்கு ஒருசெய்தி விடுத்தார். அந்தச் செய்தியில் தான் திரு. சாஸ்திரி மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

"நெருக்கடியான ஒருகட்டத்தில் நேரு நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். அவரின் இலட்சியங்கள் நிறைவேறுவதற்கு முன்னர்—இந்திய நாடு ஒரு உன்னத நிலைக்கு வர முன்னர் அவர் மறைந்துவிட்டார். அவரின் மறைவு எமக்கு பெரிய சோதனையாகவிருக்கிறது. தேசத்தை நோக்கி பல பிரச்னைகள் முன்நிற்கின்றன. இப்பிரச்னைகளை நாம் வெற்றியுடன் சமாளிப்பதற்கு நாம் உறுதி கொள்ள வேண்டும். உணர்ச்சி படைத்த இந்திய பிரஜைகளாக மாறுவோம். சொல்லொன்று செயல்வேறாக இருக்காது. எமது பண்டைய கலாச்சாரத்தைக் காக்கும் வகையில் எம்மை வழிகாட்டியவர்களின் ஆத்மா சாந்தியடையும் பொருட்டு நாம் அனைவரும் ஆக்கமுறையில் வேலை செய்வோம்" என்றும் திரு. சாஸ்திரி குறிப்பிட்டுள்ளார்.

"தனிமனிதனின் நலனுக்காக போராடாது இந்திய நாட்டின் நாற்பதுகோடி மக்களின் நலனுக்காகவும் ஒவ்வொருவரும் பாடுபடல் வேண்டும். எமது எதிர்காலம் எமது கையில்தானிருக்கிறது. எப்பொழுதும் பிறரை நம்பி வாழாமல் நமது நாட்டை எமது தேசமாக்குவோம். இதற்கு நாமெல்லோரும் ஒற்றுமையாக செயல்புரிய வேண்டும்" என்றும் பிரதமர் சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

## ரூ. 45 லட்சம் கோதுமை

கொழும்பு, புதன்

கொழும்புத்திட்டத்தின் கீழ் ரூபா 45 லட்சம் பெறுமதியான கோதுமையை கனடா அரசாங்கம் இலங்கைக்கு வழங்கியிருக்கிறது. இதுவரை கனடா 680 லட்சம் ரூபாய் பெறுமதியான கோதுமையை வழங்கியிருக்கிறது.

## உகண்டாவில் நேரு கழகம்

கம்பலா, ஜூன் 10

ஆபிரிக்காவிலுள்ள உகண்டா நாட்டில் ஜவஹர்லால் நேரு தொழில்நுட்பக் கழகம் ஒன்றையும், குழந்தைகள் நிலையம் ஒன்றையும் அமைக்க 30 லட்சம் பவுண் அரசாங்கம் திரட்ட ஆரம்பித்திருக்கிறது.

## சுகர்னோ - இக்கேடா பேச்சு

டோக்கியோ, ஜூன் 10

ஜப்பான் பிரதமர் திரு. இக்கேடா நேற்று இந்தோனேஷிய அதிபர் சுகர்னோவைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினார்.

மலேசியா பிரச்னை சம்பந்தமான உச்சி மகாநாடு இம்மாதம் 15-ம் திகதி டோக்கியோவில் நடைபெறும்.

## அலபாமாவில் மீண்டும ஆர்ப்பாட்டம்

அலபாமா, ஜூன் 10

அலபாமாவில் ஒரு பகுதியில் நேற்று நீக்ரோக்களுக்கும் பொலிஸாருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. பொலிஸார்மீது நீக்ரோக்கள் கற்களை வீசியதைத் தொடர்ந்து பொலிஸார் கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்தனர்.

சமூகஉரிமை கோரி நீக்ரோக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## பிரிட்டன் நிராகரித்தது

லண்டன், ஜூன் 10

தென்வியட்னாமின் உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையிடக் கூடாதென்று சோவியத்யூனியன் வெளியிட்ட ஒரு குறிப்பை பிரிட்டன் நிராகரித்துள்ளது.

## கனடாவில் எர்ஹார்ட்

ஒட்டாவா, ஜூன் 10

மேற்கு ஜெர்மன் அதிபர் எர்ஹார்ட் இரண்டுநாள் விஜயம் செய்யும்பொருட்டு இன்று கனடா வந்து சேர்ந்தார்.

## இந்திய கோஷ்டி

கோலாலம்பூர், ஜூன் 10

இந்திய வர்த்தக குழுவொன்று அண்மையில்கோலாலம்பூருககு விஜயம் செய்யவிருக்கிறது. இருநாடுகளின் வர்த்தக உறவுகள் சம்பந்தமாக ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டுளளதுஎன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## அஸாமில் பெரு வெள்ளம்

ஷில்லாங், ஜூன் 10

அஸாமில் கடந்த சிலதினங்களாக பெய்துவரும் கடும் மழை காரணமாக பலபகுதிகளிலும் வெள்ளமேற்பட்டுள்ளது. சகல ஆறுகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

## டிட்டோ

பெல்கிரேட், ஜூன் 10

யுகோஸ்லேவியா அதிபர் மார்ஷல் டிட்டோ பிரதமர் குருஷேசவுடன் பேச்சுகள் நடத்திவிட்டு நேற்று தாயகம் திரும்பினர்.

ஆஸ்திரேலியா – இங்கிலாந்து

## முதல் கிரிக்கெட் டெஸ்ட்: யாருக்கும் வெற்றியில்லை

ரென்ற்பிரிட்ஜ், ஜூன் 10

ஆஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் எவருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

விறுவிறுப்பான கிரிக்கெட் ஆட்டத்தைக் கண்டுகளிக்கும் பொருட்டு திரண்டுவந்த கிரிக்கெட் பிரியர்களுக்கு வருண பகவானின் வருகை பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்திருந்தது.

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட்டின் முதல்நாளன்றே மழைபெய்து பெரும் அதிருப்தியை ரசிகர்களுக்கு அளித்திருந்தது. நேற்று கிரிக்கெட் டெஸ்ட்டின் இறுதித் தினமும் மழைபெய்து கிரிக்கெட் போட்டியைத் தடைசெய்துவிட்டது.

### ஸ்கோர் விபரம்

**இங்கிலாந்து**

முதல் இன்னிங்ஸில் எட்டு விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 216 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட் நஷ்டத்துக்கு 193 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

**ஆஸ்திரேலியா**

முதல் இன்னிங்ஸில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 168 ஓட்டங்கள் எடுத்தது. இரண்டாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 40 ஓட்டங்கள் எடுத்தது. மழை காரணமாக விளையாட்டு நிறுத்தப்பட்டது.

## அணு ஆயுத சோதனை முற்றாக நிறுத்தப்பட வேண்டும்

### ஜெனிவா படைகுறைப்பு மகாநாட்டில் பிரேஸில் வேண்டுகோள்

ஜெனிவா, ஜூன் 10

நிலத்துககடியில் நடைபெறும் அணுஆயுத சோதனைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென்று ஜெனிவாவில் நடைபெறும் படைக்குறைப்பு மகாநாட்டில் பிரேஸில் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

17 நாடுகளின் படைக்குறைப்பு மகாநாடு தற்பொழுது ஜெனிவாவில் நடைபெற்றுவருகிறது. இம்மகாநாட்டுக்குப் பிரேஸில் பிரதிநிதி தலைமைவகிக்கிறார்.

தலைவர் தமது தலைமையுரையில் குறிப்பிடுகையில் சர்வதேசக் கண்காணிப்புக்குக் கீழ் நிலத்துக்கடியில் நடைபெறும் அணுஆயுதப் பரீட்சைகளைக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமென்றும் எல்லா நாடுகளும் இதற்கு ஆதரவளிக்கவேண்டுமென்றும் அவர் கூறினர்.

மாஸ்கோவில் கையெழுத்தான அணுஆயுதப் பரீட்சைத் தடை உடன்படிக்கையில் நிலத்துக்கு அடியில் நடைபெறும் சோதனைகளுக்குத் தடைவிதிக்கப்படவில்லை என்றும் நிலத்துக்கு அடியில் அணு ஆயுதப் பரீட்சைகள் நடைபெறுவது உடனடியாகத் தடைசெய்யப்பட வேண்டும் என்றும் அவர் கூறினர்.

இந்த மகாநாட்டில் கலந்துகொண்ட அமெரிக்கப் பிரதிநிதி பேசுகையில், ஆயுதப் போட்டியைத் தவிர்க்கச் சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டுமென்று அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸன் தம்மிடம் கூறியிருககின்றார் என்று தெரிவித்தார்.

### நேருவுக்கு அஞ்சலி

மகாநாட்டின் அலுவல்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்தியப் பிரதமர் நேருவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அமெரிக்க, சோவியத், பிரிட்டிஷ் பிரதிநிதிகள் நேருவின் சேவை குறித்துப் புகழ் அஞ்சலி செலுத்தினர்.

இந்த மகாநாட்டில் கலந்துகொண்ட சோவியத் பிரதிநிதி உரை நிகழ்த்துகையில் யுத்தமும், யுத்தத்துக்குக் காரண கர்த்தாக்களாக விளங்கும் ஆயுதங்களும் தடைசெய்யப்படவேண்டுமென்று கூறினர்.

யுத்தத்தைத் தடுப்பது பெரிய கஷ்டமல்ல. அது போல் ஆயுதங்களைப் பரவவிடாமல் செய்வதும் பெரிய காரியமல்ல. ஆயுதங்கள் பரந்த அடிப்படையில் நாடுகளிடையே பரவவிடாமல் முதலில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அவர் கூறினர்.

## பகைநாகர் 23 பேர் மாண்டனர்

புதுடில்லி, ஜூன் 10

மணிப்பூரில் ஒரு பகுதியில் பகைநாகர்களுக்கும் பாதுகாப்பு வீரர்களுக்குமிடையே நடைபெற்ற சண்டையில் 23 பேர் மாண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## என்ஜினியருக்கு ஆயுட்சிறை

வாஷிங்டன், ஜூன் 10

ரஷ்யாவுக்கு சில முக்கிய தஸ்தாவேஜூக்களை கொடுத்த குற்றத்துக்காக 28 வயதுள்ள ஒரு என்ஜினியருக்கு அமெரிக்க நீதிமன்றம் ஆயுட்சிறைத் தண்டனை விதித்துள்ளது.

## கொழும்பில் ரூ. 3 கோடி ஹோட்டல்

கொழும்பு, புதன்

வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்காக ரூ. 3 கோடி பெறுமதியான நவீன ஹோட்டல் ஒன்று கொழும்பில் நிறுவப்படவிருக்கிறது. 3 ஏக்கர் பரப்பில் இது நிறுவப்படும். கட்டுநாயகா விமான நிலைய வேலைகள் பூர்த்தியாகும்போது இதற்கான வேலைகளும் பூர்த்தியாகும் என அறிவிக்கப்படுகிறது.

## மீண்டும் வேலையில் அமர்த்தப்பட்டார்

காங்கேசன் துறை, புதன்

அண்மையில் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்ட காங்கேசன் துறை மின்சார என்ஜினியர் திரு. முத்தையாவை பட்டினசபைத் தலைவர் மீண்டும் வேலையில் அமர்த்தியுள்ளார்.

## நேருஜிக்கு அனுதாபம்

நீர்கொழும்பு, புதன்

'எமது காலத்தில் வாழ்ந்த மிகச் சிறந்த ஒரு மனிதர் நேருஜி. அவரது வாழ்க்கை அவரது கொள்கைகள் வருங்கால சந்ததியினருக்கு வழிகாட்டியாக இருக்கும். தம்மைப் போலவே பிறரையும் நேசித்தவர் ஸ்ரீ ஜவகர்லால் நேரு.'

இவ்வாறு நீர்கொழும்பு மேயர் திரு. ஜோன் பெரடரிகோ நேருஜியின் பிரிவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணையைப் பிரேரித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

லாவோஸ் நெருக்கடி

## போலந்து யோசனையை சீன நிராகரித்தது

வியண்டைன், ஜூன் 10

லாவோஸ் நெருக்கடி குறித்து நேற்று ஆறுநாடுகளின் தூதர்கள் வியண்டைனில் கூடி பூர்வாங்க பேச்சுகளை நடத்தினர். பேச்சுகள் நல்ல சூழ்நிலையில் நடைபெற்றபொழுதிலும் லாவோஸ் நெருக்கடி குறித்து ஜெனிவாவில் மகாநாடு கூட்டுவதா அல்லது சுவிற்சலாந்தில் நடத்துவதா என்பதில் இன்னும் ஒரு முடிவும் செய்யப்படவில்லை.

லாவோஸ் சம்பந்தமான மகாநாட்டை சுவிற்சர்லாந்தில் நடத்தலாமென்றும் இம்மகாநாட்டுக்கு ஆறு நாடுகளை அழைக்கலாமென்றும் போலந்து யோசனை தெரிவித்திருந்தது. இந்த யோசனைக்கு சோவியத் யூனியனும் பிரிட்டனும் ஆதரவு தெரிவித்துள்ளன. ஆனல் சீன நிராகரித்துவிட்டதென்று நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. லாவோஸ் நெருக்கடி குறித்து ஜெனிவாவில் மகாநாடொன்றை நடத்தலாமென்று அமெரிக்கா தெரிவித்திருந்த யோசனையை சோவியத் யூனியன் நிராகரித்துவிட்டது. இதற்குப் பதிலாக வியண்டைனில் ஒரு மகாநாட்டைக் கூட்டலாமென்று சோவியத் யூனியன் தெரிவித்திருந்தது. ஆனல் இதற்கு அமெரிக்கா ஆதரவு தெரிவிக்கவில்லை. இப்படியானதொரு சூழ்நிலையில் மகாநாடு எங்கு நடைபெறலாம் என்பது குறித்து இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

### லாவோஸில்

லாவோஸ் நெருக்கடி சம்பந்தமான பூர்வாங்கப் பேச்சுகள் ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் மறுபுறம் கடுமையான சண்டை நடைபெறுகிறது. நேற்று பதட்லாவோ படைகளுக்கும் நடுநிலைமை படையினருக்கும் கடுமையான சண்டை நிகழ்ந்தது. உயரமான மலையொன்றை கம்யூனிட்டு பதட்லாவோ துருப்புகள் தங்கள் வசமாக்கிக் கொண்டனர் என்றும் இம்மலையின் ஒருபுறம் நடுநிலைமை படையினரிடம் இருக்கிறதென்றும் ஒருசெய்தி கூறுகிறது.

## "மரண தண்டனையை நிறுத்துக!"

### தென்னுபிரிக்காவுக்கு ஐ. நா. கோரிக்கை

நியூயோர்க், ஜூன் 10

மரணதண்டனையை தென்னுபிரிக்க அரசாங்கம் ஒழிக்க வேண்டுமென்றும் சகல அரசியல் கைதிகளையும் அது விடுதலைசெய்ய வேண்டுமென்றும் ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்து சபை தென்னுபிரிக்காவை கேட்டுள்ளது.

தென்னுபிரிக்க அரசாங்கத்தின் இன ஒதுக்கல் கொள்கைகளுக்கு எதிர்மாருக எப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று ஆராயும்பொருட்டு ஐக்கியநாடுகள் சபை கடந்த திங்கட்கிழமை இரவு கூடியது.

"இன ஒதுக்கல் சட்டங்கள் காரணமாக மூன்று அரசியல் தலைவர்களுக்குத் தென்னுபிரிக்க அரசாங்கம் மரணதண்டனை விதித்துள்ளது. இன ஒதுக்கல் சட்டங்கள்மூலம் தண்டனை அனுபவித்துவரும் சகல கைதிகளும் விடுதலை செய்யப்படவேண்டும். மரண தண்டனைக்குள்ளான மூவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்" என்று கோரும் பிரேரணை யொன்றை மொரோக்கோவும் ஐவரிகோஸ்ட்டும் ஐக்கியநாடுகள் பாதுகாப்புச்சபையில் தாக்கல் செய்திருந்தது.

இப் பிரேரணை வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு பின்னர் நிறைவேற்றப்பட்டது. வாக்கெடுப்பில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், பிரேஸில் ஆகியநாடுகள் கலந்துகொள்ளவில்லை.

### "நேரு காட்"

புதுடில்லி, ஜூன் 10

லடாக்கில், நேருஜியின் அஸ்தி நேற்றுக் கரைக்கப்பட்டது. இங்குள்ள ஒரு பகுதி "நேரு காட்" என்று நேற்று பெயரிடப்பட்டது.

# "சுகாதார, கல்விப் பகுதிகள் பொது நோக்குடன் இயங்கவேண்டும்"

நல்லூர், புதன்

"சுகாதாரம், கல்விப்பகுதிகள் வெவ்வேறு பிரிவாக இயங்கிவரும்போதிலும் அவை பொதுநல நோக்குடன் செயல்படவேண்டியது அவசியமாகும்" என்று யாழ்ப்பாணம் சுகாதாரக் கல்வி விரிவுரையாளர் திரு. எஸ். பொன்னம்பலம் கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலையில் நடைபெற்றுவரும் சுகாதார ஆசிரியர் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார்.

கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலை அதிபர் திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் தொடக்கவுரை நிகழ்த்தினர். அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:-

பாடசாலைகளில் சுகாதாரத்தைப்பற்றிப் படிப்பிப்பது மாத்திரமன்றி படிப்பிக்கும் விஷயங்களை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டிய ஒழுங்குகளைச் செய்வதும் அத்தியாவசியம். சுகாதாரக் கலந்துரையாடலில் ஆசிரியர் கலந்து கொள்வதனால் பிள்ளைகளுக்கும் அவர்கள்மூலம் வீட்டிலுள்ள ஏனையோருக்கும் சுகவாழ்விற்குரிய விஷயங்களை அறியச் செய்ய முடியும்.

யாழ்ப்பாணம் சுகாதாரக் கல்வியாளர் திரு. எஸ். பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது:-

சுகாதாரப்பகுதி, கல்விப் பகுதி என இரு பகுதிகள் இருந்தபோதிலும் மக்களின் சுக நலனுக்காகவே இரு பகுதிகளும் உழைப்பதனால் பகுதி வித்தியாசம் பாராட்டாது பொது நலனையே குறிக்கோளாகக் கொண்டு நாம் கடமையாற்றினால் மக்களின் சுகம் விருத்தியடையத் தடையேதுமில்லை. ஆசிரியரின் கலந்துரையாடல் ஆரம்பித்ததின் முக்கிய நோக்கம் பல சூழ்நிலையிலும் பல இடங்களிலும் சுகாதாரத்தைக் கற்பிப்பதே. இதில் பங்குபற்றும் ஆசிரியர் எவ்வளவோ அனுபவங்களைப் பெற்றிருக்கின்றனர். அவற்றையெல்லாம் தொகுத்து உபதேசர்களின் உதவியுடன் அறிக்கைகள் தயாரித்து பொதுச்சபையில் அவை கலந்துரையாடப்பட்டு இறுதியில் தயாரிக்கப்படும் தொகுதி அறிக்கையே ஆசிரியருக்குத் தமது கடமையைச் செவ்வனே செய்ய உதவியாக இருக்கும். நான்கு குழுக்களும் பாடசாலைச் சுற்றாடல் சுகாதாரம், பாடசாலைகளில் தொற்றுநோய்களைத் தடுத்தல், பாடசாலை மாணவரின் போஷணை, பாடசாலைகளில் சுகாதாரம் கற்பித்தல் என்னும் விஷயங்களை ஆராய்ந்து தேவையான அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்காக ஒரு வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கருத்தரங்கில் டாக்டர் திருமதி எம். அருளம்பலம், செல்வி எஸ் சின்னப்பு, திரு. வி. கந்தப்பு, டாக்டர் சி. சிவஞானசுந்தரம் ஆகியோரும் பேசினர்.

## அந்தோனியார் உற்சவம்

காங்கேசன்துறை, புதன்

[illegible]ரணி அர்ச். அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 3ந் திகதி தொடக்கம் நடைபெற்று வருகிறது.

நாளை வியாழக்கிழமை காலை திவ்விய பூஜையும் மாலை 5 மணிக்கு திவ்விய சற்பிரசாத சுற்றுப்பிரகாரமும் நடைபெறும். 12ந் திகதி திருச்சொரூப ஊர்வலம். 13ந் திகதி நடைபெறும் பெரியபாடற் திவ்விய பூஜையுடன் உற்சவம் முடிவடையும்.

# பத்திரிகைகளின் ஒத்துழைப்பு

## சமுதாயநலனுக்கு அவசியம்

பதுளை, புதன்

சிறந்த நிர்வாகம் ஏற்படவும் அரசாங்க துறையிலோ தனிப்பட்ட துறையிலோ இயங்கும் ஸ்தாபனங்களின் நிலையை உயர்த்தவும் பத்திரிகைகளின் ஒத்துழைப்பு மிக்க அவசியம் என பதுளை ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி டாக்டர் டி. தாமோதரம் குறிப்பிட்டார்.

தமது காரியாலயத்தில்நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசுகையிலேயே டாக்டர் தாமோதரம் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது

பரஸ்பர நல்லெண்ணத்தோடு தெரிவிக்கப்படும்கண்டனங்கள் சமுதாய நலனுக்கு மிக்க உதவியாக இருக்கும். ஜனநாயக அமைப்புள்ள நாட்டில் பத்திரிகைகளுக்கிருக்கும் இந்த உரிமை பொது மக்களின் நலன் கருதி உபயோகிக்கப்படவேண்டும். இவ்வித நோக்கத்தோடு தெரிவிக்கப்படும் நல்ல கண்டனங்களை அதிகாரிகளும் ஸ்தாபனங்களும் அக்கறையுடன் நோக்கி ஆவன செய்யத் தவறமாட்டார்கள்.

## சேக்கிழார் மகாநாடு

தெல்லிப்பளை, வியா

பன்னாலை ஞானவைரவர் ஆலயக் கூட்டுப்பிரார்த்தனைச் சபையினர் சேக்கிழார் குருபூஜைத் தினமான எதிர்வருஞ் சனிக்கிழமை 'சேக்கிழார் மகாநாடு' ஒன்றை நடாத்தவிருக்கின்றனர். பன்னிருதிருமுறை ஊர்வலத்துடன் ஆரம்பமாகும் இந்த விழாவின் காலை நிகழ்ச்சிகளுக்கு 'சித்தாந்தச்செம்மல்' திரு. மு. ஞானப்பிரகாசமும், மாலை நிகழ்ச்சிகளுக்குத் திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபைத் தலைவர், சேர் கந்தையா வைத்தியநாதனும், இரவு நிகழ்ச்சிகளுக்குத் திரு. தெ. து. ஜயரத்தினமும் தலைமை தாங்குவர். மகாநாட்டு இயலரங்கில் சைவப் பேரறிஞர் பலர், பல கோணங்களில், சேக்கிழார் பெருமானையும் அவரது காப்பியமான பெரியபுராணத்தையும் ஆராய்வர். இரவு நிகழ்ச்சிகளின்போது நாதஸ்வர மன்னன் பத்மநாதன் கௌரவிக்கப்படுவார்.

# ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறிய இரு வாரங்களில் மரணமானுர்!

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் இதயநோய்க்கு சிகிச்சை பெற்று சுகமுடன் வெளியேறிய முத்துகுமாரு துரைசாமி என்பவர் இருவாரத்தின்பின் காலஞ்சென்ற நண்பனின் வீட்டிற்கு சென்று அவரின் மருமகனுடன் பேசிக்கொண்டிருக்கும் போது திடீரென விழுந்து மரணமானுர்.

சுன்னுகத்தை சேர்ந்த 48 வயதுடைய முத்துகுமாரு துரைசாமி என்பவர் இருதய நோயால் கஷ்டப்பட்டு 25-4-64 முதல் 26-5-64 வரை யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்தவரென்றும் ஆஸ்பத்திரியில் அவரின் அருகேயிருந்து சிகிச்சை செய்த கே. சி. முத்தையா ஆசிரியர் என்பவர் மரணமான தினத்தில் துரைசாமி ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறினுர் என்றும் அடிக்கடி ஆஸ்பத்திரிக்கு வந்து மருந்துவாங்க வேண்டுமென்று டாக்டர் கூறியதைதொடர்ந்து, நேற்று காலை ஆஸ்பத்திரிக்கு சென்று மருந்து வாங்க வந்தாரென்றும் அதன் பின் முத்தையா ஆசிரியர் வீட்டிற்கு சென்று அங்கே முத்தையாவின் மனைவியும் பிள்ளைகளும் இல்லாததால் மருமகன் வேலயுதத்துடன் கதைத்துக் கொண்டிருந்த பொழுது மரணமானுரென்றும் கூறப்படுகிறது.

மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் இயற்கை மரணமென்று தீர்ப்பளித்தார்.

## தேர்தல் முஸ்தீபு

யாழ்ப்பாணம், புதன்

மூன்னுள் சாவகச்சேரி எம். பி.யும், அடிப்படை உரிமை ஜனநாயக முன்னணி தலைவருமான திரு. வி. குமாரசாமியை அடுத்த பொதுத் தேர்தலில் கிளிநொச்சி தொகுதியில் போட்டியிடக் கோரும், மகஜர் ஒன்றை கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி, பரந்தன், பூநகரி பகுதிகளை சேர்ந்த பிரமுகர்கள் கோஷ்டி, அடிப்படை உரிமை ஜனநாயக முன்னனி காரியதரிசி திரு. ஏ. அமிர்தலிங்கத்திடம் நேற்று சமர்ப்பித்தது.

இம் மகஜரில், கிளிநொச்சி பாராளுமன்ற தொகுதியை சேர்ந்த ஆயிரத்திற்கு அதிகமான மக்கள் கையெழுத்திட்டுள்ளார்கள் என்றும் துரிதமாக முன்னேறிவரும் கிளிநொச்சிப் பகுதிக்கு திரு. வி. குமாரசாமியின் சேவை மிகவும் முக்கியமென்றும் கோஷ்டியினர் தம்மிடம் தெரிவித்ததாகவும் திரு. ஏ. அமிர்தலிங்கம் கூறினுர்.

இம்மகஜரை, திரு. வி. குமாரசாமியிடம் சமர்ப்பித்து இதற்கான வழிவகைகளை செய்வதில் நான் மிகுந்த கவனம் எடுப்பதாகவும், கோஷ்டியினரிடம் திரு. ஏ. அமிர்தலிங்கம் வாக்குறுதியளித்தார்.

மக்களின் வேண்டுகோளை ஏற்று திரு. வி. குமாரசாமி கிளிநொச்சி தொகுதியில் போட்டியிட நிச்சயம் முன் வருவாரென்றும், அவரிடமிருந்து பதில் கிடைத்ததும், இம் மாத இறுதியில் கிளிநொச்சி தொகுதியில் கூட்டங்களை நடாத்த தான் முயற்சி எடுப்பாரென்றும் முதலாவது கூட்டம் கிளிநொச்சியில் நடைபெறுமென்றும், காரியதரிசி தெரிவித்தார்.


# சிலோன் மினரல் வார்ட்டர்ஸ் லிமிடெட்

★

CEYLON MINERAL WATERS LTD

உலகப் பிரசித்திபெற்ற

ஸ்வேப்ஸ் & சன் பிளேவர்

மினரல் வாட்டர்ஸ் தயாரிப்பாளர்கள்




நந்தி இன்டஸ்ரீஸ் அன் ஏஜன்சீஸ் லிமிடெட்

ஸ்தாபனத்தாரை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தங்கள் உத்தரவுபெற்ற விநியோகஸ்தர்களாக நியமிப்பதை பெருமையுடன் அறிவிக்கின்றுர்கள்.

( ரோறஸ் தேயிலை இலங்கை முழுவதற்றும் விநியோகிப்பவர்கள் )

20, ஸ்ரான்லி ரோட் :::: யாழ்ப்பாணம்

## வானொலி நிகழ்ச்சிகள்

### வியாழன் (11-6-64)

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை: 6-45 உதயகீதம், 6-5 சைவநற்சிந்தனை, 7-15 குரவிசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல்: 12-00 இடைவேளை, 1-00 கதம்பம்.

மாலை: 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 சிறுவர் நிகழ்ச்சி, 5-45 திரை இசை.

இரவு: 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெற், 7-00 பேச்சு—'நாடும் நாமும்', 7-15 நேயர்விருப்பம், 7-45 தொடர் நாடகம்—'மட்டக்களப்பு மாப்பிள்ளை', 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 லயவிந்யாசம்— ஏ. எஸ். ராமநாதன், 9-30 சாஸ்திரீய சங்கீதம், 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை: 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 துதிப்பாடல்கள்—பாடுபவர்—டி. வி. ஆட்கொண்டார் ஓதுவார்.

பகல், 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்திய இசை, 2-10 லக்ஷ்மணபிள்ளை பாடல்கள், 2-40 ஜெயபேரிகை—வாத்திய இசை.

மாலை 5-15 துதிப்பாடல்கள், 5-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள்.

இரவு: 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 காலத்திற்கேற்ற கோலம்—பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி— டி. ஆர். மகாலிங்கம் – புல்லாங்குழல், 8-40 குரல் இசை, 9-15 வீர பாரதம்— இசைநிகழ்ச்சி, 9-30 பூடான் நிலமும் மக்களும் பற்றிய அகில பாரத சித்திரம், 10-15 இசைக்கோவை.

## கோப்பாயில் சுகாதார விழா

நல்லூர், புதன்

"மக்கள் சுகாதார வாழ்வுடன் வாழ்வதற்கு பொருளாதார அபிவிருத்தி வேண்டும். பொருளாதார அபிவிருத்தி பெற்றால் ஏனைய எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் காணமுடியும்" என்று வலிகாமம் கிழக்கு காரியாதிகாரி திரு. என். வேதாரணியசேயோன் கோப்பாய் சுகாதார விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்துப்பேசுகையில் கூறினார்.

நேற்றுக்காலை நிகழ்ச்சிகளை ஆரம்பித்துவைத்து திரு. என். வேதாரணியசேயோன் மேலும் பேசுகையில், சுகாதாரம், அபிவிருத்தி என்பனவற்றிற்கு அன்பு, பரந்த மனப்பான்மை, ஒத்துழைப்பு என்பன வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

திரு. இ. குமாரசாமி வரவேற்புரை நிகழ்த்தினர். திருமதி பி. சுப்பிரமணியம் நன்றி கூறினர்.

## பெற்றார்தின விழா

யாழ்ப்பாணம், வியாழன்

இம்மாதம் 14 ம் தேதி வண்ணார்பண்ணை சனசமூக நிலையத்தினர் சுகாதார விழாவினையும் பெற்றோர்தின விழாவையும் கொண்டாடுவர். வழக்கறிஞர் திரு. சி. நாகராஜா தலைமை தாங்குவார். 'சீராவிலிங்கனின் இறுதி வார்த்தை' நாடகம் நடைபெறும்.


ஒரு பிரபலமான டுப்பிளிகேட்டறின் பிரபலமான மொடல் சகாயமானவிலைக்கு உண்டு

M2

REX-ROTARY



எம்2 — விசேஷ அம்சங்கள்

காகிதங்கள் வைக்கும் பெட்டியில் 250 காகிதங்கள் வைக்கலாம். தபால் அட்டையிலிருந்து முழு அளவுக் காகிதம் வரையான எந்த அளவுள்ள காகிதத்திலும் பிரதிகள் எடுக்கலாம்.

உயரம், ஓரம் ஆகிய நிர்ணயங்களை இலகுவில் செய்யலாம். விரும்பிய விதத்தில் ஒழுங்கு செய்யக்கூடியது. ஸ்டென்சில் வெட்டுகள் செய்யக் கூடிய வகையில் சரி செய்யலாம்.

கௌண்டரில் நான்கு இலக்கங்கள் உண்டு. விரும்பினால், ஒற்றைக் கணக்கை மாற்றி சைபர் ஆக்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது. இது எடுக்கும் பிரதிகளின் எண்ணிக்கையைச் சரியாகக்கணக்கிடுகிறது. இயந்திரம் இயங்காதிருக்கும்போது கிராங்கின் சுழற்சிமுறை மாற்றுப் பொறி சுழற்சி எண்ணிக்கைகளை இது கணக்கிடுவதில்லை.

இத்தனை சிறப்பு வாய்ந்த அம்சங்களுடன் கூடிய எம்—2 இன் விலை குறைவானதே. பாவிக்கும்போதும் அதிக செலவு ஏற்படுவதில்லை. இதனால்தான் எம்—2 இன் விலைக்கு அது விரைவில் நல்ல சேவைபுரிகிறது.

எம்—2 மற்றிய இன்னும் அதிகம் கூறலாம். உங்களுக்குக் கஷ்டமின்றி எவ்வளவுதூரம் அது சேவை செய்யும் என்பதை நீங்கள் அறிய வேண்டும். தொலைபேசி மூலம் அல்லது கடிதம் மூலம் எம்முடன் தொடர்புகொண்டால், எம்—2 வேலை செய்யும் விதத்தை உங்களுக்கு உங்கள் காரியாலயத்திலேயே காண்பிப்பதில் மகிழ்ச்சியடைவோம்.

விரைவில் இறக்குமதி செய்யப்படவிருக்கிறது.

ஆபீஸ் இக்கியுப்மெண்ட் லிமிட்டெட்

(OFFICE EQUIPMENT LTD.)

ஐஸ்லண்ட் கட்டிடம், கொழும்பு—3.

தொலைபேசி: 6168

தந்தி: ஆபீஸ்எயிட்ஸ்


# பென்ஷன் விண்ணப்பங்கள் ஒழுங்காக பூர்த்தி செய்ய வேண்டும்

## அதிகாரிகளுக்கு நிதிமந்திரியின் எச்சரிக்கை

கொழும்பு, புதன்

பூர்த்தியாக்கப்படாத பென்ஷன் விண்ணப்பப் பத்திரங்களைத் திறைசேரிக்கு அனுப்பிவைத்து, விண்ணப்பதாரர்கள் பென்ஷன் பெறுவதில் கால தாமதமடைவதற்குக் காரணமாகும் உத்தியோகத்தர்களுக்கு இனிமேல் அபராதம் விதிக்கப்படும்.

ஓய்வுபெறும் அரசாங்கப் பொதுச் சேவையாளரின் பென்ஷன்கள் விரைவில் வழங்கப்பட வேண்டுமென்பதற்காக நிதிமந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின நடவடிக்கை எடுத்ததன் விளைவாக மேற்கண்டவாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

எல்லா நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றுநிருபம் ஒன்றில் பூரணமாக்கப்படாத பென்ஷன் விண்ணப்பப் பத்திரங்களில் கைச்சாத்திட்டு அனுப்பும் அதிகாரிகள் தம்மீது ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கூடாதென்பதற்குக் காரணம் காட்டப்படுமாறு கேட்கப்படுவார்களெனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பென்ஷனுக்கு விண்ணப்பிப்போரின் சேவை விபரங்களைச் சரிபார்த்து ஆடிட்டர்ஜெனரலின் அங்கீகாரத்தோடு ஓய்வு பெறுவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பதாகத் திறைசேரிக்கு அனுப்பிவைக்கவேண்டும் என்றும் அந்தச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பெற்றோர் ஆசிரியர்சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்களின் பங்கிலும்பார்க்கப் பெற்றோர்களின் பங்குதான் அதிகம்வேண்டியுள்ளதென்றும், இவ்வாறான பெற்றார்—ஆசிரிய சங்கங்களை ஸ்தாபித்து நடாத்துவதன்மூலம் பாடசாலைகளின் குறைநிறைகளைப் பெற்றார் அறிந்துகொள்ளவும், ஆசிரியர்களுக்கும் பெற்றார்களுக்கும் பரஸ்பரம் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் உண்டாக்கிப் பாடசாலையின் முன்னேற்றத்திற்கு உறுதுணை புரியுமென்றும் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற பெற்றோர் ஆசிரியசங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தின்போது தலைமைவகித்துப் பேசிய தலைமை ஆசிரியர் திரு. இ. செல்வராசா கூறினர்.

மாநகரசபை அங்கத்தவர் திரு. த கந்தையா, மாஜி மாநகரசபை அங்கத்தவர் திரு. பொ. நடராசா, ஆசிரியர் திரு. ந. பஞ்சாட்சரம் ஆகியோரும் பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் அவசியம்பற்றி உரை நிகழ்ந்தினர்கள். ஈற்றில் உத்தியோகஸ்தர் தெரிவு நடைபெற்றது. போஷகர்கள்: வட பிரதேச உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம், யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா. தலைவர்: திரு. இ. செல்வராசா. உப தலைவர்: திரு. சி. பொன்னுச்சாமி. காரியதரிசி: திரு. த. கந்தையா. தனாதிகாரி பொ. நடராசா. நிர்வாகசபை உறுப்பினர்கள்: திருவாளர்கள் சி. நடராசா, ந. பஞ்சாட்சரம், ஞ. இம்மானுவேல், நா. இராசு, பொ. சுந்தரம்பிள்ளை, வ. சோமசுந்தரம், வே. கணபதிப்பிள்ளை, ச. காசிப்பிள்ளை. காரியதரிசி நன்றிகூறினர்.

## கரைச்சியில் வரட்சி

கிளிநொச்சி, செவ்வாய்

கரைச்சி நீர்ப்பாய்ச்சல் திட்டத்தின்கீழ் 1964-ம் ஆண்டு சிறுபோக உற்பத்தி மிகவும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இரணைமடுக் குளத்து நீர் இப்போது 20 அடிதான் உள்ளது. கொடிய வரட்சி காரணமாக நீர் வற்றிக்கொண்டிருக்கின்றது. சிறுபோகத்துக்கு இக் குழத்து நீர் 7,500 ஏக்கருக்குத்தான் போதுமானது. ஆனல் பெரிய விவசாயிகளும் குடியேற்ற வாசிகளும் சுமார் 9,000 ஏக்கர் விதைத்துள்ளனர். மழையின்மையால் குளத்து நீர் இந்த சிறுபோகத்துக்கு அனேகமாக கடைசி ஆவணி முற்பகுதி வரையும்தான் போதியது. இரணைமடுக்குளத்து நீர் 9 அடிக்குக்கீழ் உள்ளதைப் பாய்ச்சமுடியாது. விளைவுகாலமாகிய ஆவணிக்கடைசி, புரட்டாசியில் நீர்பாய்ச்ச வழியின்றி சிறுபோக விளைவு பாதிக்கப்படக்கூடுமென்றும் அஞ்சப்படுகிறது.

## மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன்

அச்செழு கண்ணகை அம்மன் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 12-ந் தேதி பகல் 11-30 மணிக்குச் சிறப்பாக நடைபெறும்.

இதைத் தொடர்ந்து பத்து நாட்களும் அபிஷேக உற்சவம் நடைபெறும். இக்கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடத்த பிரம்மஸ்ரீ ச. இராஜேந்திரக் குருக்கள முயற்சிசெய்துவருகிறார்.

## 'பல தொழிற் சங்கங்கள் வேற்றுமையை வளர்க்கும்'

அவிசாவலை, புதன்

"இன்று தோட்டத் தொழிலாளர் மத்தியில் பலதொழிற் சங்கங்கள் தோன்றி ஒற்றுமையை வளர்ப்பதற்குப் பதில் வேற்றுமையையே வளர்த்து வருகின்றன. தோட்டத்தொழிலாளர் முன்னேற்றத்தில் அக்கறை செலுத்தாத சிலர், இன்று தோட்டத் தொழிலாளரின் முன்னேற்றத்தில் அக்கறையுள்ளவர்கள் போலத் தம்மைக் காட்டிக்கொள்ளுகின்றனர்" என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அவிசாவலை மாவட்ட வருடாந்த தேர்தல் கூட்டத்தில் பேசும்போது தலைவர் திரு. டங்கன் டேவிட் கூறினர்.

மத்திய கமிட்டியின் பிரதிநிதி திரு. எஸ். செல்லையா பேசும்போது தமது 25 வருட கால தொழிற் சங்க அனுபவத்தில் இதுவரை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்ற பலம் வாய்ந்த நிறுவனத்தைக் கண்டதில்லை என்றும், தொழிலாளரை எதிர்க்கும் எந்தப் பிற்போக்குச் சக்திகளுடனும் போராடக்கூடிய பலம் இ. தொ. கா. வுக்கு இருக்கிறதென்றும் கூறினர்.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாவர்:-

தலைவர்: திரு. டங்கன் டேவிட். உப தலைவர்: திரு. எம். எஸ். ராமசாமி நாடார். காரியதரிசி: திரு. கே. தங்கவேல். தனாதிகாரி: திரு. ஜி. ஆசீர்வாதம். 9 பேர்கொண்ட கமிட்டியொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## கி. ச. தேர்தலில் யு. என். பி. வெற்றி

ஹொறணை, புதன்

19 வட்டாரங்களைக் கொண்ட அடிகலைபத்து கிராம சபை தேர்தலில் யூ. என். பி. 14 இடங்களை கைப்பற்றிகொண்டது. மற்ற ஐந்து வட்டாரங்களில் சொற்ப வாக்குகளால் யூ. என். பி. வெற்றி பெறும் வாய்ப்பை இழந்துள்ளது.

யூ. என். பி. அங்கத்தவரும தற்போதைய தலைவருமான திரு. டீ. சி. டபிள்யூ. கன்னங்கரா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்கு

கந்தர்மடம்சந்திக்கும், இந்து மகளிர் கல்லூரிக்கும் இடையில் அரசடி றோட்டில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விபரம்: பொன்னுத்துரை விஜயரெத்தினம் 66, பலாலி வீதி, கந்தர்மடம். 500

### தேவை

தேசியசுவீப் வீடுவீடாகவோ கூட்டங்கள் உள்ள இடங்களுக்கோ கொண்டு திரிந்து விற்பதற்கு யாழ்ப்பாணக் குடாநாடு பூராவும் கிராமத்திற்கு ஒரு ஆள் தேவை. ரூ.100/- கட்டுப்பணத்துடன் நேரில் சமுகமளிக்கவும். கொழும்பு பிளான் ஜுவலறி கவுஸ், நல்லூர்யாழ்ப்பாணம், தொலைபேசி: 461. 493.

பெண்களைப் பழக்குவதற்கு பெண் கார்ச் சாரதி தேவை. லைசென்ஸ் உள்ளவர்களின் மனுக்கள் முதலில் கவனிக்கப்படும். இல்லாவிடில் பழக்கி லைசென்ஸ் எடுக்குமளவும் சம்பளம் கொடுபடமாட்டாது. நேர்முகப் பரீட்சை இல்லை. விண்ணப்பங்களை அனுப்பவும்:'மாட்டின் லேணர்ஸ்' 35, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 502

பிரிண்டிங், என்லார்ஜிங் முதலிய டாக்றும் வேலைகளில் நல்ல அநுபவ முள்ளவர்கள் தேவை. அநுபவத்திற்கும், ஆற்றலுக்கும் ஏற்பச் சம்பளம் வழங்கப்படும். நேரில் விண்ணப்பிக்கவும். செல்லம்ஸ் போட்டோகிராபர்ஸ், 94-96, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 505

இலங்கை வங்கிக்கு அல்லது மக்கள் வங்கிக்குப் போதிய சரியான ஆதன உறுதிப் பிணை கொடுத்து அரசாங்கத்திடம் நெல் எடுத்து கிழமைக்கு 2000 புசல் கோட்டா வேலை செய்யும் யாழ்ப்பாணம் - கண்டி றோட் அருகாமையிலுள்ள மில்லுகளை கொமிஷனுக்கு அல்லது குத்தகைக்கு நடத்தக்கூடிய தகுதியுள்ளவர்கள் 20-6-64க்குள் மனுப்பண்ணவும். பொருளாதார முன்னணி மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 508

### விற்பனைக்கு

சில நாட்களுக்குமுன் முழு வேலையையும் செய்யப்பட்ட நல்ல நிலைமையிலுள்ள E Y 8205 சோமசெற் கார் ஒன்று விற்பனைக்கு உண்டு. ஆனந்தகிரி, சுதுமலைச் சந்தி, மானிப்பாய் என்ற விலாசத்தில் பார்வையிடலாம். 507

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில்
சகல நோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.
2. கபிரியேல் ஓயின்மெண்ற்
சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண்களிம்பு.
3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்
தடிமன், தலையிடி, சந்துவாவு போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள் :
கபிரியல்வைத்தியசாலை, சுன்னாகம்
GABRIELS, Chunnakam. 278

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணானந்தா கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

லாவோஸில்

# அமெரிக்க விமானங்களுக்கு தடை உத்தரவு!

## பிரதமரின் முடிவுக்கு அமெரிக்க அதிகாரிகள் அதிர்ச்சி

வியன்டைன், ஜூன் 10

லாவோஸ்மீது அமெரிக்க படை விமானங்கள் ரோந்து சுற்றுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்று லாவோஸ் பிரதமர் இளவரசர் சுவர்ணபூமா இன்று உத்தரவிட்டுள்ளார்,

லாவோஸ் பிரதமரின் இவ்வுத்தரவு இங்குள்ள அமெரிக்க தூதரக ஊழியர்களுக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

லாவோஸ் நெருக்கடி சம்பந்தமாக பதட்லாவோ படைகளைக் கண்காணிக்கும் பொருட்டு லாவோஸ் பிரதமர் இளவரசர் சுவர்ணபூமாவின் வேண்டுகோளுக்கிணங்க அமெரிக்கா, பல உளவுவிமானங்களை அனுப்பியிருந்தது. கடந்த வாரத்தில் அமெரிக்க உளவு விமானங்கள் இரண்டு சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து ஆயுதம் தாங்கிய ஜெட் விமானங்கள் லாவோஸ்மீது பறந்தன. இந்தவிமானங்கள்பிரதமர் இளவரசர் சுவர்ணபூமாவின் அங்கீகாரத்துடன் உளவு விமானங்களுக்கு உதவியாகப் பறக்கின்றன என அமெரிக்கா தெரிவித்திருந்தது. ஆனல் இளவரசர் சுவர்ணபூமாவின் திடீர் மாற்றத்தைக் கண்டு தாங்கள் அதிர்ச்சியடைவதாக அமெரிக்க தூதரக ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

லாவோஸ்மீது அமெரிக்க படைவிமானங்கள் பறக்கலாம் என்று லாவோஸ் பிரதமர் தெளிவாகக் கூறியிருந்தார் என்றும் ஆனல் இதை அவர் இப்பொழுது மறுக்கிறார் என்றும் அமெரிக்க அரசாங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் பூமாவின் இந்தத் திடீர் உத்தரவு லாவோஸ்மீது எந்த அமெரிக்க விமானங்களும் பறக்க தடையாகவிருக்கிறது என்று அமெரிக்க அரசாங்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## சாஸ்திரி பேசுகிறார்

புதுடில்லி, ஜூன், 11

இந்தியப் பிரதமமந்திரி திரு லால்பகதூர் சாஸ்திரி இன்றிரவு 8-30-க்கு ரேடியோ மூலம் மக்களுக்கு ஒரு முக்கிய செய்தி விடுப்பார்.

நாளை ஒரு நிகழ்ச்சியில் அவர் ஜவஹர் ஞாபகார்த்த தபால் முத்திரைகளை வெளிவிடுவார்.

•

சென்னை கார்ப்பரேஷன் ஸ்டேடியத்தின் பெயர் நேரு ஸ்டேடியம் என மாற்றப்படவிருக்கிறது.

காலனிகள் சம்பந்தமான ஐ. நா. கமிட்டி திரு. நேருவின் மரணத்துக்கு அஞ்சலி தெரிவித்தது.

## இந்தியாவுக்கு 9 கோடி ரூபாய்

லண்டன், ஜூன் 10

உலக வங்கியும் சர்வதேச அபிவிருத்திவங்கியும் இந்தியாவுக்கு ஒன்பது கோடி ரூபா கடன் வழங்கியுள்ளது.


REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
1001 Magic Thrills!!
Guy Williams
IN
Captain Sindbad
(Wondrascope – Technicolor)



இப்பொழுது திரையிடப்படுகிறது !

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

ராஜ் (கிர்கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-30

ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) ஜூப்பிட்டர் (குருணகலை) தாஜ்மஹால் (கல்முனை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி
ராதா - ராஜன் - புஷ்பலதா
நடிக்கும்



முருகன் பிரதர்ஸ்

நானும் ஒரு பெண்

இந்திய ஜனதிபதியின் வெள்ளிப்பதக்கம் பெற்ற சிறந்த சித்திரம்.


## இன்று

பச்சிலைப்பள்ளிப் பாதயாத்திரிகர்கள் காலை 6-00 மணிக்கு பண்ணைவன்னிவலம் விநாயகர் ஆலயத்திலிருந்து புறப்பட்டு, கோயில்வயல் கிராமம், சங்கத்தார் வயல்கிராமம், இயக்கச்சி மார்க்கமாக மல்வில் கிருஷ்ணன் ஆலயத்துக்கு 12-00 மணிக்கு வந்துசேர்வர். பின்னர் பிற்பகல் 2 மணிக்குப் புறப்பட்டு பளை, போலை, தர்மக்கேணி, முல்லையடி, அறத்தி மார்க்கமாக அல்லிப்பளை பெரிய தம்பிரான் ஆலயத்தை மாலை 7-00 மணிக்கு வந்து சேர்வர்.

•

வில்லூன்றி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோவிலில் இன்று பூங்காவன உற்சவம் நடைபெறும். மெல்லிசைக் கச்சேரி, சங்கீதக் கச்சேரி ஆகியனவும் இடம் பெறும்.

## மக்கள் சுகாதார விழா
### இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வியாழன்

கோப்பாயில் நடைபெற்று வரும் மக்கள் சுகாதாரவார விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:-

காலை 9-00 க்கு சுகாதார பொருட்காட்சியை யாழ்ப்பாணம் ஸ்தலஸ்தாபன உதவிக் கமிஷனர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் திறந்துவைப்பார். கோப்பாய் கிராம கமிட்டித் தலைவர் திரு. பி. ரி சம்பந்தன் வரவேற்புரை நிகழ்த்துவார். நன்றியுரை: திருமதி வி. கந்தையா. 9-15 க்கு பொருட்காட்சி பொதுமக்கள் பார்வைக்குத் திறந்துவிடப்படும். 9-30 க்கு உடற்பயிற்சிப் போட்டி. இப்போட்டியில் அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரி, திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி, உரும்பராய் இந்து கல்லூரி, காக்குவிரு இந்துக் கல்லூரி, கோப்பாய் மத்திய மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த ஆண்கள் கலந்துகொள்கின்றனர். 9-30 க்கு இரத்த வங்கியும் இயங்கத் தொடங்கும். பகல் 1-30 க்கு ஆசிரியர்களின் சுகாதார கருத்தரங்கு - கலந்துகொள்வோர் பட்டியல் தயாரித்தல். 2-00க்கு சுகாதார கருத்தரங்கு தலைவர்: பலாலி பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. எஸ். கந்தசாமி. 2-45 முதல் 4-15 வரை திரு. எஸ். பொன்னம்பலம், டாக்டர் திருமதி எம். அருணம்பலம், செல்வி எஸ். சின்னப்பு, திரு. வி. கந்தப்பு, டாக்டர் சி. சிவஞானசுந்தரம் ஆகியோர் பல்வேறு விஷயங்கள் குறித்தும் சொற்பொழிவு நிகழ்த்துவர். மாலை: 5-10 க்கு கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி. 6-00க்கு பொதுக் கூட்டம். டாக்டர் எஸ். நடராஜா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கோப்பாய் தொகுதி வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. ஈ. ஏ. ஜோசப், திரு. கே. பொன்னுத்துரை, டாக்டர் எஸ். இரத்தினசிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். மாலை 6-45 க்கு திரைப்படக்காட்சி காண்பிக்கப்படும்.

## ஜனதிபதி ராதாகிருஷ்ணன்

புதுடில்லி, ஜூன் 10

ஜனதிபதி ராதாகிருஷ்ணன் அடுத்த மாதம் 13-ம் திகதி சென்னை வருகிறார். அன்று மாலை திருவல்லிக்கேணியில் சுவாமி விவேகானந்தரின் சிலை ஒன்றை அவர் திறந்துவைப்பார். இந்தச் சிலையை காலஞ்சென்ற பிரதமர் நேரு திறந்து வைப்பதாக இருந்தது.

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், வியாழன்

அரியாலை ஸ்ரீசித்தி விநாயகர் கோவில் சங்காபிஷேகம் நாளை நடைபெறவிருப்பதாகவும், அன்று மாலையில் சமய பிரசங்கங்களும், இசை நிகழ்ச்சிகளும் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசனில்

# 600 தொழிலாளர் வேலைசெய்ய மறுப்பு

நல்லூர், வியாழன்

காங்கேசன்துறை சிமிந்தித் தொழிற்சாலை விஸ்தரிப்புக்காக நடைபெற்றுக்கொண்டிருக்கும் "சுப்பினின்" கம்பெனி கட்டட வேலைகளில் ஈடுபட்டுள்ள சுமார் 600 தொழிலாளர்கள் நேற்று வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

செவ்வாய்க்கிழமை மாலை விஸ்தரிப்பு கட்டட வேலைகளில் ஈடுபட்டுள்ளவர்களுள் ஒரு பகுதியினரில் மூவர் வேலைநிறுத்தம் பற்றிப் பேசியபோது மேலதிகாரியால் வெளியேற்றப்பட்டனர். இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் கடமையாற்றும் ஐம்பது தொழிலாளர்கள் வெளியேற்றிவிட்டனர்.

நேற்றுக்காலை ஏனைய பகுதிகளில் உள்ளவர்களில் ஒரு சிலர் தாமதித்துச் சென்றதற்காக வேலைநிறுத்தம் செய்கிறீர்களா என்று மேலதிகாரிகளினல் கேட்கப்பட்டனர். இதனல் ஆத்திரமடைந்த அத் தொழிலாளர்களும் மற்றும் பல தொழிலாளர்களும் வெளியேறி வேலைநிறுத்தப்பட்டுள்ள பகுதியினருக்கு அனுதாபம் தெரிவித்தனர்.

சுமார் 600 தொழிலாளர்கள் வேலைசெய்ய நேற்று மறுத்துவிட்டதனல் உயர் அதிகாரிகள் வேலைகளைச்செய்ய நேரிட்டது. சிமிந்தி தொழிற்சாலை அபிவிருத்திக்காக ஜெர்மனிய நிபுணர்கள் பொறுப்பில் இந்த வேலைகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. வேலை செய்ய மறுத்த தொழிலாளர்கள் இன்று வேலைக்குத் திரும்பக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மந்திரிசபைக் கூட்டங்கள்...

(1ம்- பக்கத் தொடர்ச்சி)

டர் என். எம். பெரேரா, செனேட்டர் சந்திரா குணசேகரா, அகலவத்தை எம். பி. திரு. அனில் முனசிங்கா சகிதம் பிரதமரை அலரி மாளிகையில் சந்தித்தார். இரவு 9மணிவரையிலேயே டாக்டர் பெரேரா கோஷ்டியினர் அலரி மாளிகையிலிருந்து வெளிக்கிளம்பினர்.

### 3-வது மந்திரி சபைக் கூட்டம்

இதைத் தொடர்ந்து மூன்றுவது முறையாக மந்திரிசபைக் கூட்டம் இரவு 10-30 மணி வரை நடைபெற்றது.

### என். எம். - பிரதமர் 2-வது சந்திப்பு

3-வது மந்திரி சபைக் கூட்டத்தை தொடர்ந்து என். எம். பெரேராகோஷ்டியினரை நேற்றிரவு 11 மணிக்கு பிரதமர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். பத்திரிகை அச்சுக்குப் போகும்வரை பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதன் பின்னர் மந்திரிசபைக் கூட்டம் அதிகாலையிலோ அல்லது காலையிலோ நடைபெறலாம்என எதிர்பார்க்கப்படுகிறது.

## தேர்தல் நீதிபதிகள்

கொழும்பு, வியாழன்

தேர்தல் நீதிபதிகளாக 5 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் பதவிக் காலம் இன்று தொடக்கம் ஒரு வருட காலமாகும்.

நேற்று நள்ளிரவு வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலில் புதிய தேர்தல் நீதிபதிகளின் பெயர்கள் வெளியிடப்பட்டன. விபரம் வருமாறு: நீதியரசர்கள்: எச். டபிள்யு. தம்பையா, ஏ. டபிள்யு. எச். அபயசுந்தரா, ஜி. ரி. ஏ. சில்வா, சிறிஸ்கந்தராசா, ஏ. எல். எஸ். சிறிமானே.

## பல்கலைக்கழக புகுமுக பரீட்சை இனி இல்லை

கொழும்பு, புதன்

இலங்கைப் பல்கலைக் கழகத்திற்கு இனி புகுமுகப்பரீட்சை இல்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

1964-ம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் பல்கலைக் கழகப் புகுமுகப்பரீட்சை இருக்கமாட்டாதென்றும் அதற்குப் பதிலாக ஜி. ஸி. ஈ. 'அட்வான்ஸ்லெவல்' பரீட்சை எடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாயும் பல்கலைக் கழக உதவிப் பதிவு காரியஸ்தர் அறிவித்துள்ளார்.

## ஆசிரியசேவைக் கமிஷன் நியமிக்க கோரிக்கை

பருத்தித்துறை, புதன்

வடமராட்சித் தமிழ் ஆசிரியர் சங்க வருடாந்தக்கூட்டம் சங்கத்தலைவர் திரு. சி குருநாதன் தலைமையில் நடைபெற்றது.

வடமத்திய ஆங்கிலபாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அகில இலங்கை தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. இ. கந்தையா பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டார்.

அவர் பேசுகையில், தமிழாசிரியர்களது 11 கோரிக்கைகளில் இரு விடயத்தில் கல்வி இலாகா உதவியிருப்பதாயும் மாற்றச்சபையில் இடம் 3-ம் தர அதிபர் பதவிகள் கிடைத்திருப்பதாயும் இதுபோல நமது உரிமைகளைப் பெற எமது சங்கம் பலமடைய வேண்டியது அவசியம்எனக் கூறினர்.

பிறதொழில்கள் போல் ஆசிரியசேவைக்கென தனிக் கமிஷன் அமைக்கப்படவேண்டியதை வற்புறுத்தியதுடன் பிரதேச, மத்திய மாற்றச்சபைகளிலும் ஆசிரியர்கட்கு இடமளிக்கப்படவேண்டும் எனவும் திரு. கந்தையா கேட்டுக்கொண்டார்.

புதவருட உத்தியோகத்தர் தெரிவில் போட்டியின்றி பழையவர்களே தெரிவுசெய்யப்பட்டனர்.

நேருஜியின் மறைவு குறித்து அஞ்சலி செய்யுமுகமாக கூட்டத்தில் இரு நிமிட நேர மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

## பத்திரிகை மன்னன் மரணம்

லண்டன், ஜூன் 10

டெய்லி எக்ஸ்பிரஸ், சண்டே எக்ஸ்பிரஸ், லண்டன் ஈவினிங் ஸ்டாண்டர்ட் ஆகிய பத்திரிகைகளின் சொந்தக்காரரான பெவர்புருக் லண்டனுக்கு சமீபத்திலுள்ள தமது இல்லத்தில் 85-வது வயதில் நேற்று காலமானர்.

## பிக்குகளுக்கு பாராட்டு

களனி, புதன்

"சிங்கள மக்கள் பெருமிதம் அடையக்கூடிய இலக்கிய வளர்ச்சிக்குப் பௌத்த பிக்குகள் பெரும்பணி புரிந்துள்ளார்கள்" என களனி வித்தியாலங்கார பல்கலைக் கழக மொழித்துறைத் தலைவர் வண. கொட்ஹேன பன்னகீர்த்தி களனி ஸ்ரீ தர்மலோக வித்தியாலயத்தில் இலக்கிய மகாநாடொன்றை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டுஜூன் மாதம் 11-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.